**செய்தி வெளியீடு எண்–650** **நாள் : 03.08.2010**

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை</u>

## செய்தி வெளியீடு

AH1N1 என்னும் பன்றிக் காய்ச்சல் கேரளம் மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் பரவி வருகிறது என்ற செய்தி கிடைத்தவுடன், தமிழக எல்லையோரப் பகுதிகளில் மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழக எல்லைக்குள் வரும் மக்கள் பரிசோதனை செய்யப்பட்டு, தேவைப்படுகின்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் இக்காய்ச்சல் மேலும் பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது. இந்திய மருந்துக் கட்டுப்பாடு அதிகாரி, புது டெல்லி அவர்கள் இந்த பன்றிக் காய்ச்சல் வராமல் தடுப்பதற்கான தடுப்பு மருந்தை (Vaccine) தயாரித்து விற்க இரண்டு நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்துள்ளார். அதன் பேரில் பன்றிக் காய்ச்சல் வராமல் இருக்க "வாக்ஸிப்ளூ–எஸ் (Vaxiflu-S)" (Injectable Vaccine) மற்றும் "நாசோவாக்" (Nasal Spray Vaccine) [சிரிஞ்சி மற்றும் நாசல் ஸ்பேரயர் (Nasal Sprayer) உடன்] என்னும் மருந்துகள் பொதுச் சந்தையில் விற்பனைக்காக உள்ளன. இந்த மருந்துகளை பன்றிக் காய்ச்சல் வராமல் இருக்க மருத்துவர் ஆலோசனையின் பேரில் பயன்படுத்தலாம்.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

*******

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**